1978 செப்டம்பர் 11]

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் நோக்கத்தோடு சில பத்திரிகைகள் பொது நூலகங்களில் போடலாம், அல்லது போடப்படலாம் என்ற முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கையாளப் பட்டு வந்தது. இதன் காரணமாக ஜனசக்தி, தாமரை போன்ற பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு வந்தன. ஆகவே இந்த அரசு இதை அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த செய்தித் தாட்களும் பொது நூலகங்களில் போடப்படு வதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நிச்சயமாக முன் வரும என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில குழுவைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது போல் மாவட்ட மத்திய நூலகக் குழுக்கள் இயங்கி வருகின்றவா? இயங்கவில்லை என்றால், இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபற்றி ஒரு குழுவின் அறிக்கை தரப்பட்டு ஆலோசனை முடிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜாஸ்கட்டளை கிராமத்தில் பள்ளிக் கட்டிடம்.

* வினா எண் 137—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக் குறிச்சி பஞ்சாயத்தில் உள்ள ராஜாஸ்கட்டளை கிராமத்தில் பள்ளிக்கூட கட்டிடம் அடிமட்டம் போடப்பட்டும் நீண்ட நாளாக முடியாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடியும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இந்த கிராமத்தில் பள்ளிக்கூட கட்டிட வேலை நடைபெறவே இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊருக்கு நானே சென்றிருந்தேன். என் தொகுதியிலே இருக்கிற ஊர். அங்கே பள்ளிக்கூடம் கட்டப்பட்டு, பேஸ்மெண்ட் மட்டும் போடப்பட்டிருந்தது. அதை வைத்துதான் வேலைகள்

துரிதமாக நடைபெற வேண்டுமென்கின்ற முறையிலே இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்களுக்கு இந்தத் தகவலை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதைப் பரிசீலிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட ராஜாஸ் கட்டளை கிராமத்தில் பள்ளிகூட வேலை ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே ஊராட்சியைச் சேர்ந்த இளமதுச்சூர் என்ற கிராமத்தில் 24,000 ரூபாய் மதிப்பில் பள்ளிக்கூட வேலை நடந்து வருகிறது. அந்த வேலையை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர் குறித்த காலத்தில் முடிக்கவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது சுவர் எழுப்பி, கூரை மூடப்பட்டிருக்கின்றது என்ற தகவல் வந்திருக்கிறது.

மகனூர்பட்டி ஊராட்சி சாலை.

*வினா எண் 138.—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தாவுத்கொட்டாய், ஒதட்டன்கொட்டாய், பாபீபாஸ் கொட்டாய், முசிலிக் கொட்டாய், பட்லாஸ் கொட்டாய் ஆகிய கிராமங்களுக்கு போடப்பட்ட ஊராட்சிப் பாதை போக்குவரத்துக்கு ஏற்ப செப்பனிடாமலும், பட்டா தாரர்கள் ரோட்டை ஆக்கிரமித்துள்ளதாலும் லாரி வண்டி போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையை மேலும் சீராக்கி செப்பனிட ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, மகனூர்பட்டி ஊராட்சியில் தாவுத் கொட்டாய் மற்றும் உள்ள கிராமங்களுக்குச் செல்லும் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அப்புறப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்கு நன்றி. இந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.